குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம்,சாத்தூர்.
முன்னிலை : திரு.எஸ்.வரதராஜன், பி.ஏ.,பி.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,சாத்தூர்.
2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் நாள், புதன்கிழமை
எம்.சி.எண்.10/2025

எஸ்.இராணி காயத்ரி தேவி (வயது 36),
த/பெ.சுப்பிரமணியன்,
3/418, தெற்குத் தெரு,
மேட்டமலை,
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம். ...மனுதாரர்

//எதிராக//

திரு.P.வீரக்குமார் (வயது 44)
த/பெ.பாண்டி,
3/419, தெற்குத் தெரு,
மேட்டமலை,
சாத்தூர் தாலுகா,
விருதுநகர் மாவட்டம். ...எதிர்மனுதாரர்

மனுதாரர் BNSS பிரிவு 144–ன் கீழ் இந்த மனுவைத் தாக்கல் 25.07.2025 ம் தேதி தாக்கல் செய்துள்ளார். இந்த 12.08.2025 ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 18.03.2026 ம் தேதி இந்த நீதிமன்றத்திற்கு முன்பாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.அருண்ராஜ், பி.டெக்., பி.எல்., (சட்ட உதவி வழக்கறிஞர்) அவர்களும், எதிர்மனுதாரர் முன்னிலையாகாததால் அவர் ஒருதலைபட்சமாக்கப்பட்ட நிலையிலும், மனுதாரர் தரப்பில் கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் ஆராய்ந்து வழங்கும் . . .

## உத்தரவு

1. **மனு சுருக்கம்:**

1.1. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 04.11.2005 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது மனுதாரருக்கு 10 பவுன் தங்க நகைகளும், இரண்டு ஜோடி தங்கக் கம்மல், மோதிரம் மற்றும் கொலுசு ஆகியவையும் வழங்கப்பட்டன. எதிர்மனுதாரருக்கு அரை பவுன் மோதிரம், ரொக்கம் ரூபாய் 50,000 மற்றும் வீட்டிற்குத் தேவையான பாத்திரப் பண்டங்கள் ஆகியவை வரதட்சணையாகக் கொடுக்கப்பட்டன. ஆனால், எதிர்மனுதாரரும் அவருடைய தாயாரும் மேலும் வரதட்சணை கேட்டும், வீடு கட்டித் தரக் கேட்டும், பணம் கேட்டும் மனுதாரரைக் கொடுமை செய்தார்கள்.



S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:17:21 +0530

1.2. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 27.09.2006 அன்று தேவி மீனா என்ற பெண் குழந்தையும், 06.11.2008 அன்று கார்த்திகேயன் என்ற ஆண் குழந்தையும் பிறந்தார்கள். எதிர்மனுதாரர் தினமும் குடித்துவிட்டு வந்து மனுதாரரையும் குழந்தைகளையும் அடித்துக் கொடுமைப்படுத்திய போதிலும், குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக அதனை மனுதாரர் பொறுத்துக் கொண்டார். இதனால் பாதிக்கப்பட்ட மனுதாரர், 21.08.2024 அன்று சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர் மீது புகார் அளித்தார். அதன் அடிப்படையில் CSR எண் 394/2024 பதிவு செய்யப்பட்டது.

1.3. எதிர்மனுதாரர் குடிப்பதற்காக ஊரில் உள்ள பல நபர்களிடம் சுமார் ரூபாய் 50,000/– வரை கடன் வாங்கி வைத்துள்ளார். கடன் கொடுத்தவர்கள் வீட்டிற்கு வந்து மனுதாரர்களிடம் பணம் கேட்டுத் தொந்தரவு செய்கிறார்கள். எதிர்மனுதாரர் கோயம்புத்தூரில் உள்ள ஒரு கடையில் வேலை செய்து தினமும் ரூபாய் 1,000/– வரை சம்பாதிக்கிறார். ஆனால், குடும்பச் செலவுகளுக்கும் குழந்தைகளின் படிப்புச் செலவிற்கும் பணம் கொடுக்காமல், குடித்துவிட்டு ஊதாரித்தனமாகச் செலவு செய்து வருகிறார்.

1.4. தரப்பினர்களின் முதல் குழந்தை ஆதித்தனார் கல்லூரியிலும், இரண்டாவது குழந்தை பன்னிரண்டாம் வகுப்பிலும் படித்து வருகிறார்கள். அவர்களின் படிப்பிற்கு மனுதாரர் கடன் வாங்கியும், தன்னுடைய பெற்றோரின் உதவி மூலமும் செலவு செய்து வருகிறார். எனவே, மனுதாரருக்கு மாதந்தோறும் ரூபாய் 20,000/– பராமரிப்புத் தொகையும், குழந்தைகளின் படிப்புச் செலவிற்காக வாங்கிய கடன் ரூபாய் 60,000/––த்தையும் செலுத்த எதிர்மனுதாரருக்கு உத்தரவு பிறப்பிக்கக் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்த வழக்கில் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் அவர் முன்னிலையாகவில்லை என்பதால், அவர் ஒருதலைப்பட்சமாக (Ex–parte) ஆக்கப்பட்டார்.

3. மனுதாரர் தரப்பில்மனுதாரர் தன்னுடைய சாட்சிய வாக்குமூலத்தைத் தாக்கல் செய்து, தன்னை PW1 ஆக விசாரணை செய்து கொண்டார். மனுதாரர் தரப்பில், திருமணத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படம், திருமண அழைப்பிதழ், மனுதாரரின் ஆதார் அட்டை நகல், குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ் நகல் மற்றும் காவல்



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.18 18:17:27 +0530

நிலையத்தில் அளித்த புகார் மனுவின் ஏற்புச் சீட்டு நகல் ஆகிய 6 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4. மனுதாரர் கோரியுள்ளபடி, அவருக்கு மாதாந்திர பராமரிப்புத் தொகையாக ரூபாய் 20,000/- மற்றும் குழந்தைகளின் படிப்பு செலவிற்காக வாங்கியுள்ள கடன் ரூபாய் 60,000/- ஆகியவற்றை வழங்க எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டுமா? என்பதே இங்கு பரிசீலிக்கப்பட வேண்டிய பிரச்சனையாகும்.

5. <u>**தீர்வும் அதற்கான காரணமும்:-**</u>

5.1. மனுதாரர் தரப்பு வாதங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் கவனமாகப் பரிசீலனை செய்யப்பட்டன.

5.2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள திருமணப் புகைப்படம், அழைப்பிதழ், குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ்கள் மற்றும் காவல் நிலைய புகார் மனு ஏற்புச் சீட்டு ஆகிய ஆவணங்களிலிருந்து, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்றது என்பதும், அதன் அடிப்படையில் அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர் என்பதும் நிரூபணமாகிறது. மனுதாரரையும் குழந்தைகளையும் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து அடித்துத் துன்புறுத்துவதாகவும், அவர்களுக்குச் செலவிற்குப் பணம் வழங்கவில்லை என்றும் மனுதாரர் கூறியுள்ள வழக்கிற்கு, எதிர்மனுதாரர் மறுப்புத் தெரிவிக்க நீதிமன்றத்திற்கு வரவில்லை. எனவே, மனுதாரர் கூறும் புகார்கள் மறுக்கப்படாத நிலையில், அதனை ஒதுக்கித் தள்ள நீதிமன்றத்திற்கு எவ்வித காரணமும் இல்லை.

5.3. அதே வேளையில், மனுதாரர் தற்போது வேலை ஏதேனும் செய்து வருகிறாரா என்பது தொடர்பாகத் தனது மனுவில் எதுவும் குறிப்பிடவில்லை. மனுதாரர் தாக்கல் செய்துள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான பிரமாணப் பத்திரமும் (Affidavit of Assets and Liabilities) பெயரளவிலேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவிர, அதில் உள்ள விவரங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. அந்தப் பிரமாணப் பத்திரத்தில் மனுதாரர் கூலி வேலை செய்து மாதம் ரூபாய் 6,000/- சம்பாதித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5.4. மேலும், எதிர்மனுதாரர் கோயம்புத்தூரில் உள்ள கடையில் வேலை செய்து வருவதாகத் தனது மனு மற்றும் சாட்சியத்தில் கூறியுள்ள மனுதாரர், அதற்கு முரண்பட்ட வகையில், எதிர்மனுதாரர் குடிப்பதற்குப் பணம் இல்லாத போது ஊரில் உள்ள பலரிடம் குடும்பச் செலவு என்று பொய் சொல்லி ரூபாய் 50,000/- வரை கடன் வாங்கியுள்ளதாகக்



S VARATHARAJAN
Digitally signed by S VARATHARAJAN
Date: 2026.03.18 18:17:32 +0530

கூறியுள்ளார். இதன் மூலம் எதிர்மனுதாரர் கோயம்புத்தூரில் வேலை செய்கிறாரா? அல்லது உள்ளூரில் இருக்கிறாரா? என்பது தொடர்பாக முரண்பட்ட தகவல்கள் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

5.5. இருந்தபோதிலும், மனுதாரரையும் குழந்தைகளையும் பராமரிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை மறுக்க எதிர்மனுதாரர் நீதிமன்றத்திற்கு வராத சூழ்நிலையில், அவர் பராமரிப்பு உதவிகளைச் செய்யவில்லை என்றே கொள்ள வேண்டியுள்ளது. முதல் குழந்தைக்கு 18 வயதாகிவிட்டதால், அவர் எதிர்மனுதாரரிடம் இருந்து சட்டப்படி பராமரிப்புத் தொகை கோர முடியாது. இரண்டாவது குழந்தைக்கு 17 வயது கடந்துவிட்டதால், அவரும் இந்த வழக்கில் மனுதாரராகச் சேர்க்கப்படவில்லை. குழந்தைகளின் படிப்புச் செலவிற்காக ரூபாய் 60,000/- கடன் வாங்கியுள்ளதாக மனுதாரர் கூறினாலும், அது தொடர்பான ஆவணங்களோ அல்லது பள்ளி/கல்லூரி கட்டண ரசீதுகளோ தாக்கல் செய்யப்படவில்லை.

5.6. அதேபோல், எதிர்மனுதாரரின் வருமானம் தொடர்பான நேரடி ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. இருந்தபோதிலும், ஒரு பெண் இரண்டு குழந்தைகளுடன் வாழக் குறைந்தபட்சம் ஒரு மாதத்திற்கு ரூபாய் 6,000/- வரை செலவாகும் என்பதால், அந்த தொகையை எதிர்மனுதாரர் மனுதாரருக்கு மாதாந்திர பராமரிப்புத் தொகையாக வழங்க உத்தரவிடுவது நீதியின் அடிப்படையில் சரியாக இருக்கும் என்று இந்த நீதிமன்றம் கருதி அவ்வாறே உத்தரவிடுகிறது.

6. **<u>முடிவில்</u>**, இந்த மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

i. மனுதாரருக்கு ரூபாய் 6,000/- மாதாந்திர பராமரிப்புத் தொகையாக எதிர்மனுதாரர் செலுத்த உத்தரவிடப்படுகிறது.

ii. அந்தத் தொகையை எதிர்மனுதாரர், மனுதாரர் இந்த மனுவைத் தாக்கல் செய்த 25.07.2025-ஆம் தேதியிலிருந்து செலுத்த வேண்டும். இன்றுவரையுள்ள பாக்கித்தொகையை இன்றிலிருந்து 2 மாதத்திற்குள் செலுத்த வேண்டும்.

iii. ஒவ்வொரு மாதத்திற்கான தொகையையும் ஆங்கில மாதத்தின் 10-ஆம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

iv. செலவுத் தொகை ஏதுமில்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில், இன்று, 18.03.2026 தேதியில், அவையறிய பகரப்பட்டது.



S VARATHARAJAN

Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:17:37 +0530

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:17:54 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்.

**<u>பின் இணைப்பு</u>**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>**

ம.சா.1 – இராணி காயத்ரி தேவி (வயது 36)

**<u>மனுதாரர் தரப்புகள் சான்றாவணங்கள்</u>**

| வ.எண். | | தேதி | ஆவண விபரம் |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | : | 04.11.2005 | மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் திருமணத்தின் போது தாலி கட்டிய போது எடுத்துக்கொண்ட புகைப்படம் |
| ம.சா.ஆ.2 | : | 04.11.2005 | திருமண அழைப்பிதழ் |
| ம.சா.ஆ.3 | : | | மனுதாரர் ஆதார் அட்டை (நகல்) |
| ம.சா.ஆ.4 | : | 03.10.2006 | பெண்குழந்தை தேவிமீனாவின் பிறப்புச் சான்றிதழ் (நகல்) |
| ம.சா.ஆ.5 | : | 10.11.2008 | ஆண்குழந்தை கார்த்திகேயனின் பிறப்புச் சான்றிதழ் (நகல்) |
| ம.சா.ஆ.5 | : | 21.08.2024 | மனுதாரர் எதிரிமனுதாரர் மீது சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு ரசீது எண் – 394/2024 (நகல்) |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி –</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணம் –</u>** இல்லை

S VARATHARAJAN Digitally signed by S VARATHARAJAN Date: 2026.03.18 18:17:42 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
சாத்தூர்.